**வரையறுத்த இலங்கை சீனி தனியார் கம்பனி - 2021**
---------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

வரையறுத்த இலங்கை சீனி தனியார் கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வரையறுத்த இலங்கை சீனி தனியார் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது நான் ஒரு அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை எனக்கு பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நிதி நிலைமை கூறறு, விபரமான வருமானகூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றினை உள்ளடக்கிய பொருண்மையான விடயங்களை மாற்றுவழிகளின் மூலம் உறுதிப்படுத்துவதற்கு அல்லது மெய்மையாய்வு செய்வதற்கு எனக்கு முடியாதிருந்தது. இதன் காரணமாக நிதிநிலைமைக் கூற்று, விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன தயாரித்த பெறுமதி அல்லது விடயங்களின் அறிக்கையிடக்கூடிய அல்லது அறக்கையிட முடியாத பெறுமதிகள் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக எந்த செம்மையாக்கலினையும் செய்வதற்கு தேவையானவைகளை எனக்கு நிர்ணயிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1)ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இரக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக திட்டத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிறுவனத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு திட்டத்தினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | கணக்காய்வு அவதானப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களின் வினைத்திறனான ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததனால் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு வருகின்ற செவனகல பிரிவின் ரூபா 302,329,772 கிரயமான மற்றும் பெல்வத்த பிரிவின் ரூபா 1,568,073,020 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீளாய்வாண்டின் இறுதியளவில் முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்து முடிவடைந்திருந்தது. அதற்கிணங்க இந்த மதிப்பீடு செய்யப்பட்ட தவறினை இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் மீள்மதிப்புச் செய்து சரியான இயலளவுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன் அச்செயற்பாடு இன்னும் இடம்பெற்று வருகின்றது. 2023 ஆம் ஆண்டின் மே மாதமளவில் நிறுவனத்தின் வாகனங்கள் மற்றும் கட்டிடங்கள் ஆகிய இரண்டு சொத்துக்கள் தொகுதியின் மதிப்பீட்டு நடவடிக்கை முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் உரிய மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததன் பின்னர் கணக்கு அறிக்கைகளில் செம்மையாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கலாம். | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களின் வினைத்திறன் ஆயுட் காலத்தினை மீளாய்வு செய்வதற்கும் நியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் திருத்தம் செய்து சரியான இயலளவுப் பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் செவனகல பிரிவில் காணப்பட்ட 03 மாதங்கள் மற்றும் அதற்கு குறைந்த காலத்தில் முதிர்ச்சியடைகின்ற ரூபா 1,132,054,174 பெறுமதியான 16 நிலையான வைப்புக்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் காசும் காசுக்குச் சமனானவைகளுமாக வகைப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காசுப் பாய்ச்சல் கூற்றினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப் பாய்ச்சலினை சரியாக காசுப்பாய்ச்சல் கூற்றில் வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற பெல்வத்த பிரிவினால் ஸ்தாபிக்கப்பட்ட வடிசாலைகள் திணைக்களத்தின் கீழுள்ள ரூபா 760,763,818 கிரயமான நிலையான சொத்துக்களின் ஒவ்வொரு சொத்துக்கள் வகுதியின் மொத்தம் மாத்திரம் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்ததனால் ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு செலவு மற்றும் பெறுமானத் தேய்விற்கான ஒதுக்கீடுகளின் சரியான தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சொத்துக்களை மதிப்பீடு செய்தலில் இச்சொத்துக்களும் தனித்தனி விடயமாக மதிப்பீடு செய்யப்பட்டு பதிவேடுகளுக்கு கொண்டு வருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சொத்துக்களை சரியாக இனங்கண்டு அதற்குரிய பெறுமானத் தேய்வு செலவுகளையும் பெறுமானத்தேய்விற்கான ஒதுக்கீடுகளையும் சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திவெசம்பர் 31 இல் உள்ளவாறு செவனகல பிரிவின் நடைமுறையற்ற சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய நிலையான வைப்புக்களின் மீதி ரூபா 139,208,972 ஆக இருந்த போதிலும் அது ரூபா 100,000,000 ஆகக் காட்டப்பட்டிருந்ததனால் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையற்ற சொத்துக்கள் ரூபா 39,208,972 குறைத்தும் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 39,208,972 அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது. | நடைமுறையற்ற நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட வேண்டிய பெறுமதி ரூபா 139,208,972 ஆக இருந்ததுடன் நிதி நிலைமை கூற்றினை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (உ) | பெல்வத்த பிரிவு பயன்படுத்தி வருகின்ற 1.212 ஹெக்டயர்களைக் கொண்ட படல்கும்புர கரும்பு கொள்வனவு செய்யும் நிலையத்தின் காணியின் உறுதி உரிமையானது சீனிக் கம்பனிக்கு இல்லாதிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தை அரசாங்கம் பொறுப்பேற்ற சந்தர்ப்பத்தில் காணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் இச்சொத்துக்கள் உள்ளடக்கப்படவில்லை. அதனால் இச்சந்தர்ப்பம் வரையும் நிதி அறிக்கையில் இச்சொத்துக்கள் உள்ளடக்கப்படவில்லை.உரிய ஆவணங்களை தேடிப்பார்த்ததன் | கம்பனியால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற காணிகள் கணக்குகளில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பின்னர் கணக்கு அறிக்கைகளை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும | |
| (ஊ) | பெல்வத்த பிரிவிற்குரிய ரூபா 2,986,477,786 கிரயமான குத்தகை சொத்துக்களுடன் வெளிக்கள இயந்திரங்களும் உபகரணங்களும், நீர்ப்பாசன மற்றும் நானாவித உபகணரணங்கள், தொழிற்சாலை மின்நிலையம் மற்றும் உபகரணங்களின் பெறுமானத் தேய்வு விகிதம் முறையே 15, 6 மற்றும் 5 தசவீதங்களாக இருந்த போதிலும் அச்சொத்துக்களுக்குரிய ரூபா 2,222,255,564 கிரயமான சொத்துக்கள் 2 சதவீதத்திற்கும் 50 சதவீதத்திற்கும் இடைப்பட்ட பல்வேறு வீதங்களின் கீழ் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்ததனால் மிளாய்வாண்டிற்கான பெறுமானத் தேய்வுச் செலவினதும் பெறுமானத் தேய்விற்கான ஒதுக்கீடுகளினதும் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | 2011 ஆம் ஆண்டில் நிறுவனத்தை அரசாங்கம் பொறுப்பேற்ற போது காணப்பட்ட சொத்துக்கள் அந்த வகையிலேயே நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. காணப்படுகின்ற பெறுமானத் தேய்வு கொள்கைக்கு இணங்க பெறுமானத் தேய்வு வீதங்களில் வித்தியாசங்கள் காணப்பட்டன. கணக்கீட்டு முறைமையினூடாக உரிய சதவீத்தினை மாற்றம் செய்தல் மேற்கொள்ள முடியாததனால் எதிர்காலத்தில் சொத்துக்களின் மீள்மதிப்புடன் நிறுவனத்தின் பெறுமானத் தேய்வுக் கொள்கையை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமானத் தேய்வு செய்யப்பட வேண்டிய சொத்துக்களுக்காக நிரந்தரமான பெறுமானத் தேய்வு வீதம் தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் பெறுமானத் தேய்வு கொள்கைகளுக்கு இணங்க பெறுமானத் தேய்வு கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (எ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 117 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பயன்படுத்துகின்ற முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். செவனகல பிரிவிற்குரிய ரூபா 327,173,332 தொகையான விவசாயக் கடனுக்காக ரூபா 20,907,356 தொகையும் 2014 ஆம் ஆண்டிலிருந்து அறவிட வேண்டிய கந்தளை சினிக் கம்பனியின் ரூபா 6,002,360 மற்றும் SSP பதுளை செயற்திட்டத்தின் ரூபா 6,665,725 தொகையும் ஐயக்கடனாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த ஒதுக்கீடுகளுக்கான காரணத்திற்கான விடயம் மற்றும் உரிய கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் ஆண்டின் போது ஐயக்கடனுக்காக ஒதுக்கீடு செய்தலினை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஐயக்கடனுக்காக ஒதுக்கீடு செய்யும் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | மீளாய்வாண்டிற்கான பௌதீக இருப்பு மீளாய்விற்கு இணங்க செவனகல பிரிவின் களஞ்சியத்தில் ரூபா 2,501,788 பெறுமதியான 137 இருப்பு விடயங்களின் பற்றாக்குறையும் ரூபா 525,004 பெறுமதியான 158 இருப்பு விடயங்களின் மிகையும் அவதானிக்கப்பட்ட போதிலும் அதற்காக நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டு பெறுமதியை கணிப்பீடு செய்ய முடியாத 1224 இருப்பு வகைகளும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாததும் கைதவிர்ப்புச் செய்ய வேண்டியதுமான ரூபா 2,086,170 பெறுமதியான 211 இருப்பு விடயங்களும் களஞ்சியத்தில் காணப்பட்டன. | இருப்பு பற்றாக்குறை மற்றும் மிகைகளின் பணப் பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குவதற்கு முன்னர் அவற்றின் சட்டரீதியான சிக்கலுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை தற்பொழுது இடம்பெற்று வருகின்றது இது தொடர்பான சரிசெய்தல்களை எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இருப்பு கைதவிர்ப்பதற்கான தேவையான நடவடிக்கைகளானது அதற்காக நியமிக்கப்பட்ட ஒரு குழுவின் மூலம் தற்பொழுது இடம்பெற்று வருகின்றது. | இருப்பு சம்பந்தமான முறையான உள்ளகக் கட்டுப்பாட்டினை நடைமுறைப்படுத்தி பற்றாக்குறை மற்றும் மிகைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கும் பௌதீக மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட மீதிகளை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செவனகல பிரிவின் பௌதீக இருப்பு மீளாய்வு அறிக்கைக்கு இணங்க இருப்பு மீதி ரூபா 1,749,751,577 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் அப்பெறுமதி ரூபா 1,525,094,872 ஆக இறுதி இருப்பு ரூபா 224,656,705 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற பௌதீக இருப்பு பரீட்சிப்பானது 2021 திசெம்பர் 31 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் போது பௌதீக இருப்பு பெறுமதியை கணிப்பிட்டு அப்பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் செவனகல பிரிவிற்குள் உள்ள பௌதீக இருப்பு சம்பந்தமாக சிக்கல்கள் காணப்பட்டன. | .இறுதி இருப்பு மீதியினை சரியாக நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஒ) | செவனகல மற்றும் பெல்வத்த பிரிவுகளில் 08 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டுக் காணப்பட்ட முறையே 9,475,416 மற்றும் ரூபா 4,904,160 தொகைகளான வழியிலுள்ள இருப்புக்கள் சம்பந்தமாக முன்னைய ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் அம்மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழியிலுள்ள இருப்புக்களாக 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 9,475,416.00 பெறுமதிக்குள் உள்ள குறிப்பிடத்தக்க அளவான பெறுமதி தற்பொழுது இனங்காணப்பட்டுள்ளதுடன் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நாட்டில் காணப்பட்ட தீவிரமான நிதிப்பிரச்சினை மற்றும் நிதி மட்டுப்பாடுகளின் காரணமாக இறக்குமதிக்காக கட்டளையிடப்பட்ட பொருட்கள் துறைமுகத்திற்கு கிடைத்தல் மற்றும் விடுவித்தல் நடவடிக்கை தாமதமடைந்தமை இதற்கு பிரதான காரணமாக இருந்தது. | இப்பொருட்கள் கிடைத்துள்ளதா என்பது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | மிளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட செவனகல பிரிவிற்குரிய ரூபா 35,049,485 தொகையான உலை எண்ணை இருப்பு பௌதீகரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்காததனால் அந்த இருப்பின் சரியானதன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. அடுத்துவரும் ஆண்டில் அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து இருப்புக்களும் பௌதீக மெய்மையாய்விற்கு உட்படுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஔ) | செவனகல பிரிவினால் மீளாய்வாண்டின் போது ரூபா 178,203,240 கிரயமான 21 இயந்திரங்கள் நிதி குத்தகை வசதிகளின் கீழ் கொள்வனவு செய்து அவற்றின் கிரயம் ரூபா 48,216,240 ஆக மூலதனமாக்கப்பட்டிருந்ததனால் இயந்திரக் கணக்கின் மீதி ரூபா 129,987,000 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | சொத்துக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (க) | பெல்வத்த பிரிவின் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஊழியர் சேமலாப நிதியத்தில் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் மிகைக் கட்டணம் விதிப்பதற்காக மிகை ஒதுக்கீடாகக் காட்டப்படுகின்ற ரூபா 13,658,977 தொயினை உறுதியாக இனங்கண்டு மீளாய்வாண்டினுள் நிதி செயற்பாட்டு கூற்றின் மூலம் பதிவழிப்பதனால் ஆண்டிற்கான இலாபம் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2011/2012 ஆண்டுகளில் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மிகைக்கட்டணத்திற்கான ஒதுக்கீடுகளை பதிவழித்தலானது மீளாய்வாண்டின் கணக்கு அறிக்கைகளில் செம்மையாக்கப்பட்டுள்ளது மற்றும் அடுத்து வரும் காலங்களில் இவ்வாறான கணக்கீட்டுத் தவறுகளை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மிகைக் கட்டண ஒதுக்கீடுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (கா) | பெல்வத்த சீனி தொழிற்சாலை அரசாங்கத்தினால் பொறுப்பேற்க்கப்படும் போது அதிலிருந்து நீக்கப்பட்டு தனியான ஒரு நிறுவனமாக பால் சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்கின்ற ஒரு நிறுவனத்தின் 20 உழவு இயந்திரங்களை 2011 ஆம் ஆண்டிலிருந்து 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பயன்படுத்தியமைக்காக அந்த நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 54,339,769 தேறிய தொகை மற்றும் அந்த நிறுவனத்தினால் கம்பனியின் உத்தியோகபூர்வ இல்லத்தினை பயன்படுத்தியமைக்காக பெறவேண்டிய ரூபா 19,034,850 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த | நிறுவனத்தை அரசாங்கம் பொறுப்பேற்ற ஆரம்பக் காலத்திலிருந்து பெல்வத்தை பால் நிறுவனத்துடன் இவ்வாறு கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அற்றினை பணமாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதில் குறிப்பிட்ட 20 உழவு இயந்திரங்களுக்காக இரண்டு நிறுவனங்களுக்கிடையே ஒரு உடன்படிக்கை இல்லாததுடன் முன்பிலிருந்து காணப்பட்டு வந்த வாடகைப் பணத்திற்கு நிறுவனம் அரசாங்கத்தினால் பொறுப்பேற்றதன் | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்தும் வரையறுத்த இலங்கை சீனிக் கம்பனியின் ஒவ்வொரு பிரிவிற்குமிடையே இடம்பெறுகின்ற கொடுக்கல் வாங்கல்களிலிருந்தும் கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் விபரமாக |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் அந்த மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக குத்தகை உடன்படிக்கை அல்லது மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | பின்னரும் இந்த கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றது. 2020 ஆம் ஆண்டின் போது பெல்வத்தை பால் நிறுவனத்துடன் கலந்துரையாடப்பட்டு இந்த 20 உழவு இயந்திரங்களையும் ஒப்படைப்பதற்கு அல்லது உடன்படிக்கையின் மூலம் அவற்றினை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வது சம்பந்தமாக கலந்துரையாடி அதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு சட்டப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அது இன்னும் கலந்துரையாடல் மட்டத்தில் காணப்படுகின்றது.<br><br>எங்கள் நிறுவனத்தினால் இந்த பால் நிறுவனத்திற்கு வழங்கியுள்ள வீட்டிற்காக உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளதுடன் உரிய வாடகைப் பணம் 2021 ஆம் ஆண்டிலிருந்து பணமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நீர் மற்றும் மின்சாரம் மாத்திரம் இவ்வாறு எதிரீடு செய்யும் வகையில் அவர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் இந்த பால் நிறுவனத்துடன்<br><br>மேற்கொள்ளப்படும் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் பணத்தின் அடிப்படையில் மாத்திரம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (கி) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செவனகல பிரிவின் விவசாயிகள் முழுக்கடன் பணத்தின் மொத்தம் ரூபா 327,173,332 ஆக இருந்த போதிலும் அது தொடர்பாக ச் சமர்ப்பிக்கப்பட்ட விவசாயக் கடன் பட்டோலையின் பிரகாரம் ரூபா 324,818,149 ஆக இருந்ததனால் ரூபா 2,355,183 வித்தியாசம் காணப்பட்டது. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | விவசாயக் கடன் மீதியினை நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (கீ) | வரையறுத்த இலங்கை சீனிக் கம்பனியை அரசாங்கம் பொறுப்பேற்ற 2011 ஆம் ஆண்டிலிருந்து மிளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பெல்வத்த பிரிவின் நிதிக்கூற்றுக்களில் ஏனைய இருப்பு | 2011 ஆம் ஆண்டில் நிறுவனம் அரசாங்கத்தினால் பொறுப்பேற்க்கப்படும் போது நிதி அறிக்கைகளில் காணப்பட்ட நிலையான மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் அந்த வகையிலேயே | பொருள் மீளாய்வின் மூலம் வழக்கொழிந்த இருப்புக்கள் உறுதியாக இனங்காணப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீதிகளில் வழக்கொழிந்த இருப்பாக (Provision for obsolete stocks) ரூபா 9,251,437 கழித்துக் காட்டப்பட்டிருந்த போதிலும் அந்த இருப்பு சம்பந்தமான எந்த தகவலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | பொறுப்பேற்றல் இடம்பெற்றிருந்ததுடன் இந்த மீதியை செம்மையாக்கி கணக்கு அறிக்கைகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (கு) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட பெல்வத்த பிரிவிற்குரிய உற்பத்தி செய்த சீனியின் மீது செலுத்த வேண்டிய ரூபா 109,138,256 தொகையான தேசத்தை கட்டியெழுப்புதல் வரிப் (NBT) பெறுமதியினுள் 2012 - 2016 காலப்பகுதி தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 92,125,804 தேசத்தை கட்டியெழுப்புதல் வரிப் பணம் காட்டப்பட்டிருந்த போதிலும் இந்த வரி சம்பந்தமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வரி அறிக்கை சமர்ப்பிக்கப்படாதிருந்ததனால் வரிப் பணங்களின் சரியான தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை. | 2012 ஆம் ஆண்டிலிருந்து கணக்கறிக்கைகளில் காணப்பட்ட ரூபா 109,138,256 தொகையான செலுத்த வேண்டிய தேசத்தை கட்டியெழுப்புதல் வரிப் பணம் (NBT) சம்பந்தமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தல் கடித்தினை அடிப்படையாகக் கொண்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் 2022 ஆம் ஆண்டின் போது கணக்கறிக்கைகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | நிலுவையாகக் காணப்படும் வரிப் பணத்தை தாமதமின்றி தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கூ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெல்வத்தை பிரிவின் சேவைகள் வழங்கும் முற்பணக் கணக்கின் ரூபா 4,176,907 வரவு மீதியும் ரூபா 4,229,336 செலவு மீதியும் திறைசேரி வழங்கல் முற்பணக் கணக்கின் ரூபா 4,768,688 செலவு மீதியும் கணக்கீட்டு முறைமையிலுள்ள சிக்கல் மற்றும் ஏனைய காரணங்களினால் உருவாகியிருந்தும் இந்த மீதியினை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது காணப்படுகின்ற கணக்கீட்டு முறைமையினுள் உள்ள வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்ட முற்பணங்கள் கணக்கு மீதியினுள் காணப்படுகின்ற செலவு மீதிகளைத் தீர்த்துவைத்து நாளதுவரையாக்குமாறு நிதிக்கொடுப்பனவு பிரிவிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டின் போது ஸ்தாபித்தற்கு திட்டமிடப்பட்டுள்ள புதிய கணக்கீட்டு முறைமைக்கு சரியான மீதிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. | சேவை வழங்கல் முற்பணக் கணக்கின் மீதியைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கெ) | பெல்வத்த பிரிவில் பயன்படுத்துகின்ற கணக்கீட்டு கணனி மென்பொருள் முறைமையானது நிர்ணயிக்கப்பட்டவாறு அமுல்ப்படுத்தப்படாததனால் பெற்றுக்கொள்ளப்பட்ட பேரேட்டு கணக்கு மீதிகளின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | 2016 ஆம் ஆண்டின் பின்னர் கணக்கீட்டு மென்பொருள் முறைமைக்கான வருடாந்த அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படவில்லை மற்றும் புதிய மென்பொருளினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் முறைமை சரிசெய்யப்படும். | நாளதுவரையாக்கப்பட்ட மென்பொருள் முறைமையினை நிறுவனத்தில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் 23(அ) பிரிவினால் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அமைச்சரினால் 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்ட கட்டளையின் I ஆம் பகுதியின் 30 ஆம் கட்டளை | சீன் உற்பத்தி செய்தல் அல்லது சீனியை சுத்திகரித்தல் சம்பந்தமாக செவனகல தொழிற்சாலையினால் வருடாந்தம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வருடாந்தம் சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான சட்டத் தேவைப்பாடு தற்பொழுது பூரணப்படுத்தப்பட்டு வருகின்றது. அதற்கிணங்க சீனி உற்பத்தியில் வெளியேற்றப்படுகின்ற கழிவுப் பொருட்களை மூலப்பொருளாக ஈடுபடுத்தி உப உற்பத்திகளாக உயிரியல் பசளை உற்பத்திக்குத் தேவையான தொழிற்சாலைகளும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதற்கு மேலதிகமாக கழிவு நீரினை சுத்திகரித்தல் நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளும் தற்பொழுது அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றன. | சுற்றாடல் பாதுகாப்பு நடைமுறையினை ஸ்தாபித்து அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை** | | | |
| (i) XIX ஆம் அத்தியாயத்தின் 5.1 ஆம் பந்தி | பெல்வத்த பிரிவின் உத்தியோகத்தர்களின் வீடுகளுக்கான வீட்டு வாடகை அறவிடப்படாதிருந்தது டன் அந்த வீடுகளின் திருத்தம் மற்றும் பராமரிப்புச் செலவுகள் கம்பனியால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | இலவசமாக வீடுகளை வழங்குதலினை நிறுவனம் ஆரம்பத்திலிருந்து மேற்கொண்டு வருவதனால் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கும் போது அனைத்து ஊழிய சலுகைகளையும் வழங்குவதற்கு முகாமைத்துவம் இணங்கி அதற்கிணங்க இன்றுவரை | வீட்டு வாடகை மற்றும் வீடுகளை திருத்தம் செய்யும் செலவுகள் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் கம்பனியால் செலுத்தப்பட்ட கட்டணத்தை அறவீடு செய்வதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இலவசமாக உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்குதல் இடம்பெற்றுள்ளது. வாடகையினை அறவிடுதல் சம்பந்தமாக நிறுவனத்தின் முகாமைத்துவ கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டதுடன் அறவிடப்பட வேண்டிய வாடகைப் பணம் சம்பந்தமாக அரசாங்க மதிப்பீட்டு நிறுவனத்தின் உதவியினைப் பெற்றுக்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | XIX ஆம் அத்தியாயத்தின் 5.2 ஆம் பந்தி | செவனகல பிரிவினை அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு முன்னரிலிருந்து அறவிடப்படுகின்ற ரூபா 20 இற்கும் ரூபா 85 இற்கும் இடைப்பட்ட மாதாந்த வீட்டு வாடகைக் கட்டணம் 11 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட்டு வருகின்றது. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது.<br><br>மாதாந்த வாடகையினைத் திருத்தம் செய்வதற்கு தேவையான வீடுகளின் பொருளாதாரப் பெறுமதியை கணிப்பதனூடாக வீடுகளின் மதிப்பீட்டு நடவடிக்கையை மேற்கொள்வதற்குத் தேவையான செயற்பாடுகள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றது. | நிகழ்காலத்திற்கு பொருந்துகின்ற வகையில் வீட்டு வாடகைகளை திருத்தம் செய்தல் வேண்டும். |
| (iii) | XIX ஆம் அத்தியாயத்தின் 5.8 ஆம் பந்தி | நீர்ப்பட்டியல்கள் மற்றும் மின்சாரப் பட்டியல்கள் உத்தியோகத்தர்களால் செலுத்தப்பட வேண்டிய போதிலும் செவனகல பிரிவின் நீர் பயன்பாடு 60 அலகுகளுக்கு மேல் பயன்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரம் உத்தியோகத்தர்களிடமிருந்து கட்டணங்களை அறவீடு செய்தலும் மின்சாரப் பாவனைக்காக ரூபா 250 சலுகை | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. நீர் மற்றும் மின்சாரத்திற்காக ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற நிவாரணம் தொடர்பாக பணிப்பாளர் சபையின் அங்கிகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் எதிர்காலத்தில் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | மின்சாரம் மற்றும் நீர்க்கட்டணங்கள் உத்தியோகத்தர்களால் செலுத்தப்படுதல் வேண்டும். கம்பனியால் செலுத்தப்பட்ட கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | வழங்கியதன் பின்னர் மிகுதியான மின்சாரப் பட்டியல்களை சம்பளத்திலிருந்து அறவீடு செய்வதனூடாக கம்பனியால் செலவு செய்யும் நடைமுறை பின்பற்றப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டில் உத்தியோகத்தர்களின் வீடுகளின் மின்சார கட்டணமாக ரூபா 818,872 தொகை கம்பனியால் செலவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | | | | |
| | (i) | 8.2.2. ஆம் பந்தி | மிகை நிதிகளை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடும் உரிய அமைச்சரின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செவனகல பிரிவின் 29 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்த ரூபா 1,754,403,649 தொகை மற்றும் பெல்வத்த பிரிவின்11 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்த ரூபா 1,022,300,216 தொகைக்காக இணக்கப்பாடும் | இணக்கிக் கொள்ளப்படுகின்றது. | நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடும் உரிய அமைச்சரின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | 8.3.3 ஆம் பந்தி | தொடர்புபட்ட பந்தியின் தேவைப்பாட்டினை நிறைவேற்றாதும் திறைசேரி அங்கீகரித்த ஊக்குவிப்பு படித் திட்டம் இல்லாமலும் தலைமை அலுவலகத்திலும் செவனகல மற்றும் பெல்வத்த பிரிவுகளிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 327,692,999 தொகையான ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட்டிருந்தது டன் செவனகல மற்றும் தலைமை அலுவலகத்தில் ரூபா 19,946,082 தொகையான மிகையூதியமும் செலுத்தப்பட்டிருந்தது. | செவகனகல பிரிவு-இணங்கிக் கொள்ளப்படுகின்றது. . | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.3 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 9.2 ஆம் பந்தி | கம்பனியின் பதவியணியினர் திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | செவகனகல பிரிவு-இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | 9.3 ஆம் பந்தி | அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்படாது உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததனால் காணப்படுகின்ற பதவிகளின் எண்ணிக்கை, சேர்த்துக்கொள்ளப்பட் | செவகனகல பிரிவு-இணங்கிக் கொள்ளப்படுகின்றது.<br>பெல்வத்த பிரிவு - நிறுவனத்திற்கு ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளும் நடைமுறையினைத் தயாரிப்பதற்குத் தேவையான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது. தற்பொழுது நிறுவனத்தின் மனிதவலு மதிப்பீட்டினைத் தயாரித்து பணிப்பாளர் | சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்ப்பு நடைமுறையினைத் தயாரித்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ட மற்றும் பதவியுயர்வு வழங்கிய நடைமுறை, சம்பள அளவுத்திட்டத்தின் சரியான தன்மை என்பன தொடர்பாக கணக்காய்வின் போது பரீட்சிக்க முடியாதிருந்தது. | சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அமைச்சினூடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் ஆட்சேர்ப்பு நடைமுறையின் நடவடிக்கைகளை பூரணப்படுத்திக் கொள்ளலாம். | |
| (ஈ) | 2015 மே 25 ஆந் திகதிய PED 1/2015 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| | (i) 3.1 ஆம் பந்தி மற்றும் 3.2 ஆம் பந்தி | தொடர்புபட்ட சுற்றறிக்கைக்கு இணங்க ஒவ்வொரு பதவிக்குமான மாதாந்த உச்ச அளவு எரிபொருள் எல்லையினை மிகைத்து எரிபொருட்கள் கொள்வனவு செய்யப்படுமாகவிருந்தால் அதற்காக சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது செவனகல பிரிவின் 09 உத்தியோகத்தர்களுக்கு 5,973.77 லிற்றர் | செவகனகல பிரிவு- இணங்கிக் கொள்ளப்படுகின்றது. 2022 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து உரிய சுற்றறிக்கை அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எரிபொருட்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 667,381 செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ii) | 3.8 ஆம் பந்தி | உத்தியேகபூர்வ வாகனங்களுக்கு தகமையுள்ள உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட பயணத்திற்காக சாரதிகளுக்குச் செலுத்தப்படுகின்ற மேலதிக நேர வேலை மற்றும் திரண்ட படிகள் உரிய உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு தகமையுள்ள உத்தியோகத்தர்களினால் தனிப்பட்ட பயணத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட கம்பனியின் உத்தியோகபூர்வ வாகனத்திற்கான சாரதியின் வாழ்க்கைப்படி வதிவிடப்படி மற்றும் மேலதிக நேர வேலைப்படியாக கம்பனியால் மீளாய்வாண்டின் போது ரூபா 418,500 செலவு செய்யப்பட்டிருந்தது. | செவகனகல பிரிவு- இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 819,729,092 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 1,171,901,614 ஆகும். அதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 352,175,522 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கம்பனியின் மொத்த வருமானம் ரூபா 3,297,112,307 ஆல் அதிகரிக்கையில் மொத்த செலவானது ரூபா 3,180,494,927 ஆல் அதிகரித்தல் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காணரமாக இருந்தது.

## 3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | செவனகல பிரிவிடமிருந்து கரும்பு பயிர்ச்செய்கைக்காக கடனைப் பெற்ற விவசாயிகள் கரும்பு பயிர்ச்செய்கையிலிருந்து விலகி ஏனைய அனுமதியற்ற பயிர்ச் செய்கைக்கு ஈடுபடுவதன் காரணமாக 161 விவசாயிகளிடமிருந்து அறவிட வேண்டிய மொத்தமாக ரூபா 10,651,992 கடன் மீதியை அறவீடு செய்யும் விவசாயிகளை மீண்டும் கரும்புச் செய்கையில் ஈடுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இக்கடன்களில் ரூபா 5,118,994 தொகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் ரூபா 1,567,943 தொகை 3 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாகவும் அறவிடப்படாது காணப்பட்டது. | கரும்புப் பயிர்ச் செய்கையிலிருந்து விலகிய விவசாயிகளிடமிருந்து கடனை அறவீடு செய்வதற்கு முன்னர் மீண்டும் அந்த விவசாயிகளை கரும்பு பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்த வேண்டியதுடன் நிறுவனத்தின் கமத்தொழில் திணைக்களத்தினால் அதற்காக பல்வேறு நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. வழக்கமாக விவசாயக் கடனை அறவீடு செய்வதற்கு 3 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் எடுக்கின்றது. அதற்கான காரணம் கரும்பு விளைச்சலினை ஒரு ஆண்டிற்கு ஒரு தடவை அறுவடை செய்வதுடன் கடனை அறவீடு செய்தலானது 3-5 இற்கும் இடைப்பட்ட தவணைகளில் இடம்பெறுவதாகும். | முழுக் காணி அளவிலும் கரும்பு பயிர்ச் செய்கையை மேற்கொள்வது தொடர்பாக வகனம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) | செவனகல பிரிவில் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட 19 வாகனங்களக்குரிய ரூபா 1,741,028 தொகையான 617 பொருட்களையும் உபகரணங்களையும் மற்றும் பெறுமதியை இனங்காணமுடியாத 60 பொருட்களையும் உபகரணங்களையும் ஏலத்தில் விற்பதற்கு அல்லது பொருத்தமான நடவடிக்கையின் மூலம் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. | தொழிற்சாலை ஸ்தாபிக்கப்பட்டு முப்பத்து ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்டுள்ளது எனவே அவசர பராமரிப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான உதிரிப் பாகங்களை அவசரமாக கொள்வனவு செய்யும் போது சந்தையில் காணப்படுகின்ற பொருள் தட்டுப்பாட்டின் காரணமாக இப்பொருட்கள் பல ஆண்டுகளாக வழங்கப்படாத பொருட்களாக இருந்த போதிலும் கொள்வனவு செய்யாது இருப்பதற்கு அல்லது இருப்பிலிருந்து பதிவழித்தலினை மேற்கொள்ள முடியாத நிலையில் காணப்பட்டது. | இருப்பு சம்பந்தமான கட்டுப்பாட்டு முறைமையை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பெல்வத்த பிரிவு 2013 ஆம் ஆண்டின் போது குத்தகை வசதிகளின் கீழ் ரூபா 128,910,000 தொகையான கிரேன் இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்காக ரூபா 120,750,000 பணமும் அதற்குத் தேவையான மின்சாரத்தினை வழங்குவதற்கு ரூபா 2,254,850 தொகையும் செலவு செய்திருந்தது. எவ்வாறாயினும் வழங்குனரினால் இணங்கிக்கொண்டவாறு அந்த இயந்திரத்தினை தொழிற்சாலைக்குள் ஸ்தாபிக்காமையின் காரணமாக ரூபா 123,004,850 செலவு செய்யப்பட்டிருந்த இந்த இயந்திரத்தினை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாது கொள்வனவு செய்த தினதித்திலிருந்து விளைவற்றுக் காணப்பட்டது. | தொழிற்சாலைக்கு வழங்கப்படுகின்ற கரும்புத் தண்டுகளை உட்படுத்துவதற்காக 2012/2014 ஆம் ஆண்டுகளின்போது கிரேன் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் வேலை பூர்த்தியடைந்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் 03 மாத காலத்திற்குள் பழுதடைந்துள்ளது. அதன் பின்னர் பல தடவைகள் திருத்தம் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டும் அது வெற்றியளித்திருக்கவில்லை. 2023 ஆம் ஆண்டின் போது இச்செயற்திட்டத்தினை மீண்டும் ஆரம்பிப்பதற்காக உரிய வழங்குனருடன் கலந்துரையாடி உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டதுடன் இந்த ஆண்டின் பெரும் போகத்தின் போது 03 மாத காலம் செயற்திட்டத்தினை அமுல்படுத்தி செயலாற்றலீனை சமர்ப்பிக்குமாறு முகாமைத்துவத்தினால் வழங்குனருக்கு தெரியப்படுத்தப்பட்டது. | உள்ளக கணக்காய்வின் மூலம் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர்களை இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நிதிகுற்றவியல் புலனாய்வுப் பிரிவின் புலனாய்வு நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றத்தினை ஆராய்ந்து பார்த்து அதனை மீள அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பெல்வத்த பிரிவினால் தொழிற்படு மூலதனத்தை சிறப்பாக முகாமைத:துவம் செய்யாமையின் காரணமாக அடிக்கடி வங்கி மேலதிகபபற்று பெற்றுக்கொள்ளப்பட்டு மேலதிகப் பற்று வட்டி செலுத்தப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் மற்றும் மீளாய்வாண்டின் மேலதிகப் பற்று வட்டி முறையே ரூபா 67,876,432 மற்றும் ரூபா 46,006,590 செலுத்தப்பட்டிருந்தது. வங்கி கடன் மற்றும் மேலதிகப் பற்று வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பெல்வத்த பிரிவின் ரூபா 893,541,770 தொகையான 09 நிலையான வைப்புக்கள் பிணையாக வைக்கப்பட்டிருந்தன. | நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளைப் பேணுவதற்காக ஒவ்வொரு ஆண்டிலும் வங்கி கடனையும் மேலதிகப் பற்று வசதிகளையும் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. இதன் போது நிலையான வைப்புக்களுக்காக வழங்கப்பட்டுள்ள வட்டி வீதத்தினை விட 2.5% சதவீதம் வங்கியினால் அறவிடப்படுகின்றது. இந்த அனைத்து மேலதிகப்பற்று வசதிகளும் அரசாங்க வங்கியான இலங்கை வங்கியிடமிருந்தே பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | தொழிற்படு மூலதனத்தை சிறப்பாக முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |
| (உ) | பெல்வத்த பிரிவினால் முகாமைத்துவ மதீர்மானத்தின் அடிப்படையில் 2012 ஆம் ஆண்டிலிருந்து விவசாய கடனுக்காக அறவிடப்படுகின்ற 12 சதவீத வட்டி வருமானத்தில் 3 சதவீதம் விவசாயிகளின் நலன்புரிக்காகவும் 1 சதவீதம் நிறுவனத்தின் நலன்புரி நடவடிக்கைகளுக்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் | நிறுவனத்தினால் விவசாயக் கடனுக்காக 12% வட்டிப் பணம் அறவிடப்படுவதுடன் 2012 ஆம் ஆண்டின் போது அப்போதைய நிறுவனத்தின் நிருவாக அதிகாரியினால் இந்த வட்டி வருமானத்தில் 3% விவசாயிகளின் நலன்புரிக்காவும் 1% ஆன பணம் நிறுவனத்தின் நலன்புரிக்காகவும் ஒதுக்கீடு செய்யுமாறு நிதிப்பிரிவிற்கு | நலன்புரி நடவடிக்கைகளுக்கு கம்பனியின் நிதியை ஒதுக்கீடு செய்தல் மற்றும் செலவு செய்வதற்காக தேவையான அதிகாரத்தினையும் அங்கீகாரத்தினையும் முறைப்படியாக |

| | | | |
|---|---|---|---|
| | 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க விவசாயிகளின் நலன்புரி கணக்கு ரூபா 104,595,757 தொகையாகவும் நிறுவனத்தின் நலன்புரி கணக்கு ரூபா 34,930,417 தொகையாகவும் இருந்தது. எவ்வாறாயினும் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டுவரை இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்திலிருந்து எந்த நலன்புரி நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அந்த நலன்புரி நடவடிக்கைகளுக்காக பணத்தை ஒதுக்கீடு செய்வாற்கான பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தெரியப்படுத்தப்பட்டிருந்த து. அதற்கிணங்க 2012 ஆம் ஆண்டிலிருந்து 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை உரிய ஒதுக்கீடுகள் கணக்கு அறிக்கையினுள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் போது விவசாயக் கடனுக்காக வட்டி வீதத்தை 8% வரை குறைப்பதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்ததோடு மேற்கூறிய ஒதுக்கீடு நிறுத்தப்பட்டுள்ளது. | பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| (ஊ) | செவனகல பிரிவின் தொழிற்சாலையின் தேவைப்பாட்டிற்காக ரூபா 11,412,646 பணத்திற்கு 2018 ஆம் ஆண்டின் போது இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இலத்திரனியல் காந்த பிரித்து வேறுபடுத்தும் (Electro Magnetic Separator) இயந்திரம் 2023 மே 09 ஆந் திகதி வரையும் ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் இயந்திரம் நல்ல நிலையில் காணப்படுகின்றது. என்பதற்கு கம்பனியின் பொறியிலாளரினால் சான்றிதழும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் அப்பெறுமதி கொள்வனவு முற்பணமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2023 மே 09 ஆந் திகதி வரையும் இச்சொத்துக்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் உலகத்தில் காணப்பட்ட கொரோனா தொற்றுநோய் நிலைமையின் காரணமாக இந்த உபகரணத்தை ஸ்தாபிக்கும் மிகுதி நடவடிக்கைக்காக வெளிநாட்டவர்கள் நிறுவனத்திற்கு வருகைதரல் தாமதமடைந்துள்ளது. எனவே ஸ்தாபிக்கும் நடவடிக்கையும் தாமதமடைந்துள்ளதுடன் தற்பொழுது அதன் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்து வருகின்றது. | இயந்திரத்தினை ஸ்தாபித்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். |
| (எ) | தேவைப்பாட்டினை முறைப்படியாக இனங்கண்டு கொள்ளாது களஞ்சியப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததனால் ரூபா 142,062,708 பெறுமதியான 6422 இருப்பு விடயங்கள் 05 ஆண்டுகளுக்குள் விளைவற்று களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. | தொழிற்சாலையினை ஸ்தாபித்து முப்பத்துஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்டுள்ளது. எனவே அவசர பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக தேவைப்படுவதனால் வைக்கப்பட்டுள்ளன. | கைதவிர்ப்புச் செய்வதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | செவனகல பிரிவினால் 2018 ஆம் ஆண்டின் போது இந்தியாவிலிருந்து ரூபா 9,564,866 பெறுமதியான ஆவியாகுதல் இயந்திரம் (Evaporator) இறக்குமதி செய்யப்பட்டு ரூபா 3,924,394 சுங்க கட்டணம் செலுத்தப்பட்டது. அதற்கான துணைக்கருவி (SS Tube) பொருள் விபரக்குறிப்பிற்கு இணங்கியிருக்காததன் அடிப்படையில் மீள அனுப்பி 2019 ஆம் ஆண்டில் மீண்டும் இறக்குமதி செய்யும் போது செலுத்தப்பட்ட ரூபா 4,830,446 சுங்க கட்டணத்தினை வழங்குனரிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் அப்பெறுமதி கம்பனிக்கு ஒரு நட்டமாக இருந்ததுடன் அந்த சுங்க கட்டணத்தை செலுத்துவதற்குரிய ஆவணங்கள் கம்பனியிடம் இல்லாமையின் காரணமாக அப்பெறுமதியும் வெளிநாட்டு கட்டளை முற்பணமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உரிய தரப்பினர்களுடன் தொடர்பு கொண்டு சுங்க கட்டணத்தை மீள அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சுங்க கட்டணத்தை வழங்குனரிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | கம்பனியின் பெல்வத்த பிரிவின் 4.607 ஹெக்டயர் அளவான 4 காணிகளின் கொள்வனவு கிரயமான ரூபா 44,149,728 தொகை கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ரூபா 28,050,728 கிரயமான பெல்வத்த மற்றும் தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணி (1.686 ஹெக்டயர்) களின் உரிமை கம்பனியிடம் இருக்கவில்லை. | பெல்வத்த பிரிவில் 2011 நவம்பர் 11 ஆந் திகதியில் காணப்பட்ட அனைத்து நிலையான சொத்துக்களும் அந்த வகையிலேயே பொறுப்பேற்றல் மேற்கொள்ளப்பட்டதுடன் அச்சந்தர்ப்பத்தில் காணிகளின் உரிமை தொடர்பாக பகுப்பாய்வு மேற்கொள்ளப்படவில்லை. அதற்கிணங்க தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணியும் கணக்கு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. பெல்வத்த வெளியக விவசாய அலுவலகம் அமைந்துள்ள காணியின் உரிமை அப்போதைய நிறுவனத்தின் உரிமையாளராக இருந்த ஆரிய சீல விக்கிரமநாயக்க அவர்களின் பெயரில் காணப்பட்டிருந்தும் அக்காணிக்காக நிறுவனத்தின் நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. அதனால் அக்காணியின் உரிமையை நிறுவனத்திற்கும் பெற்றுக்கொள்வதற்காக தேவையான ஆவணங்கள் உரிய நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | கம்பனி பயன்படுத்துகின்ற காணிகளின் உரிமையை பொறுப்பேற்பதற்கும் கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |